
# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் வ. மகேஸ்வரன்

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் வ. மகேஸ்வரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 10 - 9**


# International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. V. Mageshwaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | |
| Prize | : | **Rs. 350/-** |

103. **முனைவர் பொ. இரமேஷ்** 486
பாரதியின் தமிழ் வளர்த்த மொழி உணர்வும் தேசிய உணர்வும்

104. **முனைவர் செ. கற்பகம்** 491
இசைத்தமிழ் அறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதர்

105. **முனைவர் சு. அட்சயா** 496
பாரதியின் பன்முகச் சிந்தனைகள்

106. **ம. விவேக் பிரபு** 501
கண்ணன் பாட்டில் மகாகவி பாரதியின் ஞானப் பார்வை

107. **Mangayarkkarasi K.S.** 505
PSYCHOLOGICAL CHANGES IN GEORGE ELIOT'S *SILAS MARNER*

108. **பேரா. சாமுண்டீஸ்வரி** 509
தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

109. **த. ஜீவராணி** 514
ஒப்பிலக்கணம் வரைந்த உரைசால் கால்டுவெல்

110. **ர. தென்றல்** 518
அண்ணா நாடகங்களில் சமுதாயப் பார்வைகள்

111. **இரா. அகிலா பிரியா** 521
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் வருக்கக் குறளும்

112. **பி. முத்துலெட்சுமி** 526
கவியோகி சுத்தானந்த பாரதியாரின் கவிதைப்படைப்பு

113. **சா. பாரதி** 530
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் வருக்கக்குறளும் 'பிரிவின் சிறப்புகளும்'

114. **பா. மாரியம்மாள்** 534
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

115. **செ. ரஜினி** 539
திரு.வி.க.வின் பெண்ணின் பெருமையில் பெண்ணியச் சிந்தனைகள்

116. **முனைவர் ஜோ. ஜோசப்பின் ஜூலியட்** 543
வேதநாயக சாத்திரியாரின் தமிழ்ப்பணி

117. **முனைவர் பி. தட்சணாமூர்த்தி** 547
வெ.ப. சுப்பிரமணியனாரின் தமிழ்ப்பணி

118. **முனைவர் சி. தீபா** 550
புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் ஓலைச்சுவடி பதிப்புப்பணி (பஞ்சமரபு)

# 106. கண்ணன் பாட்டில் மகாகவி பாரதியின் ஞானப் பார்வை



**ம. விவேக் பிரபு**
*உதவிப்பேராசிரியர்*
*கணிதவியல்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை - 641 029.*

## முன்னுரை

"பாட்டுக்கோர் புலவன்" முண்டாசுக் கவி பாரதியின் முப்பெரும் பாடல்களில் ஒன்றான கண்ணன் பாட்டில் ஏராளமான இலக்கிய நயங்கள் இடம் பெற்றிருந்தாலும் பாரதியின் ஞானச் சிந்தனைகள் நம்மைப் பெரிதும் ஈர்க்கின்றன. ஆனால் பாரதியினுள் ஆழமான பார்வை கொண்டு பயணிக்கும் போதே அவனது ஞானப் பார்வை நமக்கு வசப்படுகின்றது. இருபத்து மூன்று கிளைத் தலைப்புகளைக் கொண்ட கண்ணன் பாட்டில் மகாகவி பாரதியின் ஞானப் பார்வையினை விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உவமைகளுக்குள் புதையுண்டிருக்கும் உண்மைகள்

எந்த ஒரு கவிஞனாக இருந்தாலும் தன் உள்ளக் கருத்தினை உவமையின் வாயிலாக வெளிப்படுத்துவது இயல்பு. பாரதி சாதாரண கவி அல்ல. அவன் மகாகவி என்பதை உவமைகளைக் கையாளுவதிலேயே வெளிப்படுத்தி இருக்கிறான். பெரும்பாலும் கவிஞர்கள் தாங்கள் சொல்ல முற்படும் கருத்தினை ஓர் உவமை கொண்டு விளக்குவர். ஆனால் பாரதி இரட்டை உவமைகளைப் பயன்படுத்துகிறான். இந்த நடை பாரதிக்குப் புதிதல்ல. ஏற்கனவே பாஞ்சாலி சபதத்தில் சூதாட்டத்தில் தோல்வியுற்றுப் பொருட்களை இழந்த தருமனைக் குறிப்பிட,

> ***"கோயிற் பூசை செய்வோர் - சிலையைக் கொண்டு***
> ***விற்றல் போலும்,***
> ***வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத் திழத்தல்***
> ***போலும்,***
> ***ஆயிரங்க ளான - நீதி யவை உணர்ந்த தருமன்***
> ***தேயம் வைத் திழந்தான் - சிச்சீ! சிறியர் செய்கை***
> ***செய்தான்."***

என்று இரண்டு உவமைகளைப் பயன்படுத்தியிருக்கும் பாரதி, தனது கண்ணன் பாட்டிலும் இதே நடையைக் கடைப்பிடிக்கிறான். "கண்ணன் என் தோழன்" பகுதியில்,

> ***"மழைக்குக் குடைபசி நேரத் துணவென்தன்***
> ***வாழ்வினுக் கெங்கள் கண்ணன்."***